# காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி
## விருதுநகர் மாவட்டம்

**ந.க.எண் :- 191/2010** **நாள்:- 11.06.2010**

## அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் (APAMT) – 2010 - 2011
## நாடு தழுவிய ஒப்பு நோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி சார்பாக **2010-2011** ஆம் ஆண்டு **அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ்** அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்ததாரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக்கொள்ளப்படும். மேலும் குறைந்த பட்ச தகுதியான மூன்றாம் வகுப்பு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு பணிகள் வழங்கப்படும் .

பணிகளுக்குரிய ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **29.06.2010** வரை அலுவலக வேலை நாட்களில், அலுவலக நேரத்தில் மாலை **5.00** மணி வரை உரிய தொகையினை பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் . ஒப்பந்தப்படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புபவர்கள் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/– செலுத்த வேண்டும். தபால் வழி தாமதங்களுக்கு காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது . வேலைக்குரிய டேவணித் தொகையை ரொக்கமாக செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல்அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **30.06.2010**ம் தேதி **புதன்கிழமை மாலை 3.00** மணி வரை **பெற்றுக்கொள்ளப்படும்.** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்றைய தினம் **3.30 மணிக்கு திறக்கப்படும்.** ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாட்களில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும். நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தெரிந்து கொள்ளலாம்

# 2010–2011 ம் ஆண்டு அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (லட்சத்தில்) | டெண்டர் ஷெட்யூல் கட்டணம் | டேவணித் தொகை | வேலை செய்து முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.6,12,13 கள்ளிக்குடி மெயின் தார்ச்சாலையிலிருந்து பாரதி தெரு, தீப்பெட்டி ஆபிஸ் தெரு பெந்தகொஸ்தே தெரு வழியாக தார்ச்சாலை அமைத்தல் | 10.30 | 6240/- | 25750/- | 6 மாதம் |
| 2 | வார்டு எண்.8 கே.கரிசல்குளம் சமுதாயக்கூடம் கட்டுதல் | 10.00 | 1560/- | 25000/- | 6 மாதம் |
| 3 | வார்டு 14 தாமரை ஊரணி மேம்பாடு செய்தல் | 5.00 | 780/- | 12500/ | 3 மாதம் |
| 4 | வார்டு.1 எ.நெடுங்குளத்தில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 3.00 | 780/- | 7500/- | 2 மாதம் |
| 5 | வார்டு 2 பிள்ளையார் கோவில் தெருவில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 4.00 | 780/- | 10000/- | 2 மாதம் |
| 6 | வார்டு 15 ஜெகஜீவன்ராம் தெருவில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 2.10 | 780/- | 5250/- | 2 மாதம் |
| 7 | வார்டு 10 பெரியார்நகரில் சிமிண்ட் சாலை அமைத்தல் | 2.90 | 780/- | 7250/- | 2 மாதம் |
| 8 | வார்டு எண்.11 அரசு மருத்துவமனை அருகில் 60000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் 6'' ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் மற்றும் கூடுதல் பைப்லைன் அமைத்தல் | 6.00 | 1560/- | 15000/- | 6 மாதம் |
| 9 | வார்டு எண்,15 மதுரை தூத்துக்குடி சாலை கிழக்கு பக்கம் பெண்கள் நவீன கழிப்பறை கட்டுதல் | 3.00 | 780/- | 7500/- | 3 மாதம் |
| 12 | வார்டு 10 கே.செவல்பட்டி மயானத்தில் எரிமேடை மற்றும் சுற்றுச்சுவர், அமைத்தல், வார்டு–15 அருந்ததியருக்கு பாத்தியப்பட்ட மயானத்தில் சிறிய பாலம் மற்றும் அடிபம்பு அமைத்தல், ஆதிதிராவிடர் மயானத்தில் அடிபம்பு அமைத்தல், வார்டு எண்–3 அச்சம்பட்டி மற்றும் நெடுங்குளம் மயானத்திற்கு அடிகுழாய் மற்றும் குளியல் தொட்டி வசதி செய்தல் | 5.00 | 780/- | 12500/- | 4 மாதம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | வார்டு 4 முத்தாலம்மன் கோவில் சிமிண்ட் சாலை | **2.50** | 780/- | 6250/- | 2 மாதம் |
| 12 | வார்டு 14 பள்ளிவாசல் நடுத்தெரு சிமிண்ட் சாலை | **3.50** | 780/- | 8750/- | 2 மாதம் |

திருமதி.ப.காந்திமதி
தலைவர்
காரியாபட்டி பேரூராட்சி
விருதுநகர் மாவட்டம்

திரு.சோ.சிவகுமார் பி.எஸ்.சி
செயல் அலுவலர்
காரியாபட்டி பேரூராட்சி
விருதுநகர் மாவட்டம்

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் ஒப்பந்தக்காரர் பெயர், செயல் அலுவலரின் முகவரி எழுதப்பட்டு மற்றும் எந்த வேலை விபரத்தை என்று தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். ஒரு வேலைக்கு ஒரு ஒப்பந்தப் புள்ளிதான் அனுப்பவேண்டும்.

2. ஒவ்வொரு ஒப்பந்தக்காரரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகைளைய டேவணித் தொகையாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி இரசீதை ஒப்பந்தப் புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். இந்த டேவனித் தொகை உரிய அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டவுடன் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு திருப்பி அளிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படாத ஒப்பந்தக்காரர்களுடைய டேவனித் தொகை வேலைகளுக்கான பிணை வைப்புத் தொகையாக வைத்துக் கொள்ளப்படும். இத்தொகைக்கு பேரூராட்சியால் வட்டி எதுவும் கொடுக்கப்பட மாட்டாது.

3. மதிப்பீடு விலைக்கு கூடுதலாக வேலையைச் செய்வதாகக் குறிப்பிடும் ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மதிப்பீடு விலைக்கு குறைவாக வேலையைச் செய்வதாக ஒப்புக்கொள்கிறவர்கள் 10ரூ வரை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். 10ரூ மேற்கொண்டு கூடுதலாக கோரும் சதவிகிதத் தொகை கூடுதல் பிணை வைப்புத் தொகையாகச் செலுத்தினால் தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு பேரூராட்சியில் வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது. கூடுதலாகப் பெறப்பட்ட பின் வைப்புத்தொகை மட்டும் வேலைகள் முடிவுற்று, முடிவு அறிக்கை வந்த பின் திரும்ப வழங்கப்படும்.

4. ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. டேவணித்தொகை செலுத்தப்படாத ஒப்பந்த புள்ளிகளும், உரிய படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்குப் பிறகு பெறப்படும் ஒப்பந்தப் புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.

6. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்படும். குறைந்த விகித ஒப்பந்தப் புள்ளியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேரூராட்சியை கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.

7. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து 3 நாட்களுக்கு குறிப்பிட்ட படிவத்தில் தவறாது சொந்தச் செலவில் ஒப்பந்தக்காரர் வேலைகளை முறையாக முடித்துத் தருவதாக ஒப்பந்தப் பத்திரம் பேரூராட்சிக்கு எழுதிக் கொடுக்கவேண்டும். அவ்வாறு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்க தவறினாலோ அல்லது அதிகப்படியாகச் செலுத்தக் கோரிய டேவணித் தொகையைச் செலுத்தத் தவறினாலோ மறு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்து வேலைகள் முடிக்கப்படும். இதனால் முன் ஒப்பந்தக்காரரின் டேவனித் தொகை பறிமுதல் செய்யப்பட்டு பேரூராட்சிக்கு ஆதாயம் செய்யப்படும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் செலுத்திய டேவனித் தொகை இது சம்பந்தமாக கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையாளரின் முடிவிற்கு ஒப்பந்தக்காரர் கட்டுப்படவேண்டும். தணிக்கையாளரின் முடிவிற்து ஒப்பந்தக்காரர் கட்டுப்படவேண்டும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்தக்காரர் பேரூராட்சிக்கு செலுத்தவேண்டும்.

8. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டவுடன் ஒப்பந்தப்புள்ளியைத் திரும்பம் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தக்காரருடைய டேவனித் தொகை பேரூராட்சிக்குப் பறிமுதல் செய்யப்படும். ஒப்பந்தப்புள்ளியை திரும்பப் பெற்றுக் கொண்டதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் சம்பந்தக்காரர் பொறுப்பு ஆவார்.

9. ஒப்பந்தக்காரர் மனுவில் வேலைகள் மற்றும் சதவீதத்தினை தெளிவாக எழுதியிருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்தக்காரர் கையொப்பம் இட்டிருக்கவேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

10. ஒப்பந்தக்காரர் ஒப்புக் கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாகவும் ஆய்வு செய்யும் அலுவலர்கள், பொறுப்பாளர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கவேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டால், அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை 24 மணி நேரத்தில் வேலை செய்யும் இடத்தில் இருந்து ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் அகற்றிக் கொள்ளவேண்டும்.

11. இதில் குறிப்பிட்டுள்ள வேலைகளில் வேலை முடிவுற்று 6 மாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்தக்காரர் தனது சொந்தப் பொறுப்பில் சரிசெய்து கொடுக்கவேண்டும். தவறினால் ஒப்பந்தக்காரர் செலுத்தியுள்ள பின் வைப்புத் தொகையிலிருந்து பேரூராட்சியில் பழுது பார்க்கப்படும்.

12. தொழில் நுட்ப அலுவலரின் அறிவுரையின் படி தார்சாலை அமைக்கத் தேவைப்படும் தார் அனுமதிக்கப்பட்ட விலையில் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தில் ஒப்பந்தக்காரரே தன் சொந்தப் பொறுப்பில் வாங்கிப் பயன்படுத்த வேண்டும். அதற்கான ரசீதுகள் பட்டியலுடன் இணைக்கப்படவேண்டும்.

13. ஒப்பந்தப் பத்திரம் எழுதி முடித்த தேதியிலிருந்து ஒருவார காலத்திற்குள் வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்க வேண்டும். குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலை முடிக்கப்படவில்லையானால் நிர்வாக அதிகாரி நிர்ணயிக்கும் அபராதக் கட்டணம் வசூலிக்க ஏதுவாகிவிடும். வேலையை குறித்த காலத்திற்குள் முடிக்கப்படவில்லையானால், அதனால் பேரூராட்சிக்கு ஏற்படும் நஷ்டத்தை வசூலிக்க நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அபராதக் கட்டணம் விதிக்கப்பட்டகற்கு பிறகும் வேலையை முடிக்கவில்லையானால் பின் வைப்புத் தொகையை பறிமுதல் செய்யவும், மறு ஒப்பந்தப் புள்ளி கோரி வேலையை முடிக்கவும் பேரூராட்சிக்கு அதிகாரம் உண்டு. இதனால் உண்டாகும் இழப்பீடுகளுக்கு ஒப்பந்தகாரரே பொறுப்பாவார்.

14. தார்சாலை அமைக்கத் தேவைப்படும் ரோலர், ஹீட்மாஸ்டர் கலவை இயந்திரம் மற்றும் இதர தளவாடச் சாமான்கள் ஒப்பந்தக்காரர் தன் சொந்தப் பொறுப்பில் எடுத்து வேலை செய்யப்பட வேண்டும். அதற்கான ரசீதுகள் மற்றும் லாக் சீட்டுகள் பட்டியலுடன் இணைக்கப்பட வேண்டும்.

15. பட்டியல் விதிமுறைப்படி ரூ.10,000/– க்கு மேல் செய்யப்படும் வேலைகளுக்கு வருமானவரி, விற்பனை வரி பிடித்தம் கண்டிப்பாக செய்யப்படும்.

16. வேலை உத்திரவு வழங்கப்பட்டவுடன் மதிப்பீட்டில் 0.3% கட்டிடத் தொழிலாளர் நல நிதிக்கு வங்கி கேட்பு வரைவோலையாக பேரூராட்சி அலுவலகத்தில் வழங்க வேண்டும். தவறும் பட்சத்தில் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும்.

17. ஏற்கனவே இப்பேரூராட்சிக்கு ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணி முடிக்காத ஒப்பந்தகாரர்களுக்கு வேலைக்கான ஷெட்டியூல் வழங்கப்பட மாட்டாது.

18. பணி நடைபெறும் இடத்தில், திட்டத்தின் பெயர், மதிப்பீடு, பணியின் விபரம், பணிக்கான கால அளவு, ஒப்பந்தகாரர் பெயர் ஆகிய விபரங்கள் அடங்கிய தகவல் பலகை கண்டிபப்பாக அமைக்கப்பட வேண்டும்

19. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையால் வெளியிடப்பட்ட பொறியாளர் கையேட்டில் குறிப்பிட்டுள்ள தகுதியுடைய ஒப்பந்தகாரர்கள்.

20. ஒப்பந்தபுள்ளி தொடர்பான நிபந்தனைகள் வேலை நாட்களில் பேரூராட்சி அலுவலகத்தில் தெரிந்துகொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு www.tenders.tn.gov.in, www.tntownpanchayats.org என்ற இணைய தளத்தில் பார்க்கலாம்.

செயல் அலுவலர்,
காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்

**<u>பெறுநர்</u> :—**

**பதிவு பெற்ற அனைத்து ஒப்பந்தக்காரர்கள்,**
காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி,
காரியாபட்டி

**<u>நகல்</u>:—**

1. மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் மாவட்டம் —அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) சிவகங்கை மண்டலம் – அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) சிவகங்கை மண்டலம் – அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
4. இளநிலை பொறியாளர் (பேரூராட்சிகள்), வத்திராயிருப்பு (தொகுப்பு), விருதுநகர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக.
5. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், காரியாபட்டி அவர்களுக்கு தகவலுக்காக.
6. செயல் அலுவலர்கள், விருதுநகர் மாவட்டம் அனைத்து பேரூராட்சிகளின் தகவலுக்காக
7. அலுவலக விளம்பர பலகை காரியாபட்டி முதல்நிலை பேரூராட்சி.